பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

11 05 2026 MONDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மேற்காசியாவில் நிலவும் சூழலை கண்காணிப்பதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட உயர்நிலை குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

2. சோதனைச் சாவடிகளில் அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

3. விவசாயிகளுக்கு தேவையான உரம் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. பாகிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

5. ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

>>>>><<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழலை கண்காணிப்பதற்காக மத்திய அரசால் நியமிக்கப்பட்ட உயர்நிலை குழுக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தற்போதை சூழல் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

பெட்ரோலிய பொருட்களின் விநியோகம் குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<<

மேற்காசியாவில் நிலவும் சூழலை கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்த 7 வேண்டுகோள்களை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சுயசார்பு இந்தியாவை உருவாக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளதை சுட்டிக்காட்டி பிரதமர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாக கூறினார்.

பெட்ரோல், டீசல் பயன்பாட்டை குறைப்பது, வீட்டிலிருந்து பணிபுரிய முன்னுரிமை அளிப்பது, அடுத்த ஓராண்டுக்கு தங்கத்தை வாங்குவதை தவிர்ப்பது, இயற்கை வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிப்பது, வெளிநாட்டு பயணங்களையும் ஓராண்டிற்கு தவிர்ப்பது, வெளிநாட்டு பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெயின் பயன்பாட்டை குறைப்பது போன்ற வேண்டுகோள்களை பிரதமர் விடுத்துள்ளதையும் டாக்டர் எல். முருகன் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<<

சோதனைச் சாவடிகளில் அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சோதனைச் சாவடி ஒன்றில் அதிநவீன வசதியை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த தொழில்நுட்பத்தின் மூலம், வாகனங்கள் சோதனைச்சாவடிகளில் தடையின்றி செல்ல இயலும் என்றும் அவர் கூறினார்.

இதன்மூலம், 285 கோடி ரூபாய் மதிப்பிலான பெட்ரோலியப் பொருட்கள் சேமிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

தொழில்துறையினரும் ஆராய்ச்சியாளர்களும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியத்தை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வலியுறுத்தியுள்ளார்.

மும்பை ஐ.ஐ.டி வளாகத்தில் கரியமில வாயு வெளியேற்றம் தொடர்பான அதிநவீன சோதனைக் கூடம் தொடங்கி வைக்கப்பட்டதை சுட்டிக்காட்டி, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான பயணத்தில் இது, முக்கியமான மைல் கல்லாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசியக் கல்விக் கொள்கையில், ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டிருப்பதையும் திரு. தர்மேந்திர பிரதான் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

மருந்தியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப துறைகளில் கூடுதல் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மருந்து உற்பத்தியில் இந்தியா சிறந்து விளங்குவதாகவும் அவர் கூறினார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்துகள் 150-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆராய்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாகவும் திரு. ராஜீவ்ரஞ்சன் சிங் தெரிவித்தார்.

>>>>><<<<<<

பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி, கடந்த பத்தாண்டுகளில் 174 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் கூறியுள்ளார்.

தேசிய தொழில்நுட்ப தினத்தை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதியும் 34 மடங்கு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதிலும் இந்தியா முன்னணியில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 2014ஆம் ஆண்டு புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 350ஆக இருந்தது என்றும், தற்போது இது 2 லட்சத்திற்கும் கூடுதலாக அதிகரித்துள்ளது என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>><<<<<<

விவசாயிகளுக்கு தேவையான உரம் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த உரத்துறை கூடுதல் செயலர் திருமதி. அபர்ணா சர்மா, தற்போது 51 சதவீதம் அளவிற்கு உரங்கள் கையிருப்பில் உள்ளதாக கூறினார்.

வழக்கமாக 33 சதவீதம் உரம் மட்டுமே கையிருப்பில் வைக்கப்படுவதாகவும், கூடுதல் தேவையை கருத்தில் கொண்டு கையிருப்பு விகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

உரங்களின் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

தேவைக்கேற்ப உரங்கள் இறக்குமதி செய்யப்படுவதாகவும் திருமதி. அபர்ணா சர்மா தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்குவங்கத்தை ஒட்டிய எல்லைப் பகுதியில் வேலி அமைப்பதற்கான நிலத்தின் உரிமையை எல்லைப் பாதுகாப்புப் படைக்கு வழங்குவதற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று கொல்கத்தாவில் முதலமைச்சர் திரு. சுவேந்து அதிகாரி தலைமையில் நடைபெற்ற முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்த நில மாற்ற நடவடிக்கைள், இன்று தொடங்கி அடுத்த 45 நாட்களுக்குள் நிறைவடையும் என்று முதலமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக அவர் கூறினார்.

இதேபோல், மேற்குவங்கத்தில் மக்கள்தொகை கணக்கெடுப்பு பணிகளை தொடங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக திரு. சுவேந்து அதிகாரி தெரிவித்தார்.

>>>>><<<<<

பீகாரில் பொதுமக்களின் குறைகளை களைவதற்கென இணையதளம் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி சேவையை அம்மாநில முதலமைச்சர் திரு. சாம்ராட் சௌத்ரி இன்று தொடங்கி வைத்தார்.

பாட்னாவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் இந்த சேவைகளை தொடங்கி வைத்ததாக பீகார் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இவற்றில் பெறப்படும் புகார் மனுக்கள் மீது, 30 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் காலதாமதம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு நாளை மறுநாள் பதவியேற்கவுள்ளது.

முதலமைச்சராக திரு. என். ரங்கசாமி பதவியேற்கிறார்.

துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

பிஜேபி தலைவர் திரு. நிதின் நபின், புதுச்சேரி பிஜேபி பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான டாக்டர் மன்சுக் மாண்டவியா மற்றும் பலர் பதவியேற்பு விழாவில் பங்கேற்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

பஞ்சாபில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வரும் 26ஆம் தேதி நடைபெறும் என்று அம்மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

105 நகராட்சிகளுக்கு இந்த தேர்தல் நடைபெறவுள்ளதாகவும், வாக்கு எண்ணிக்கை 29ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ராஜஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

Chittorgarh மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் இருசக்கர வாகனத்தின் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

பாகிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

கைபர் பத்துன்துவா மாகாணத்திற்கு உட்பட்ட Swat மாவட்டத்தின் சுற்றுலா தளம் அருகே சென்று கொண்டிருந்த வேன் பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதாக அந்நாட்டு காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>><<<<<

இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என்று போர்ச்சுக்கல் அமைச்சர் திரு. Joao Rui Ferreira கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த ஒப்பந்தத்திற்கு தொடக்கத்திலிருந்தே போர்ச்சுக்கல் ஆதரவு அளித்து வந்ததை சுட்டிக்காட்டினார்.

இந்தியா விரைவில் 3வது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பெரிய அளவிலான சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, உலக அளவில் இந்தியா பொருளாதாரத்தில் வலிமைமிக்க சக்தியாக உருவெடுத்து வருவதாகவும் போர்ச்சுக்கல் அமைச்சர் கூறினார்.

>>>>><<<<<<

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப், 3 நாள் அரசுமுறைப் பயணமாக நாளை மறுநாள் சீனா செல்கிறார்.

சீன அதிபர் திரு. Xi Jinping அழைப்பை ஏற்று அவர் இப்பயணத்தை மேற்கொள்வதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மேற்காசியாவில் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலைக்கு இடையே இரு தலைவர்களின் சந்திப்பு முக்கியத்துவம் பெறுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

>>>>><<<<<<

பிலிப்பைன்ஸ் துணை அதிபர் திருமதி. Sara Duterte பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 255 உறுப்பினர்களும், எதிராக 26 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது, நிதி முறைகேடுகளில் ஈடுபட்டது போன்ற புகார்களின் அடிப்படையில் இந்த பதவி நீக்க தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

>>>>><<<<<<

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

118 புள்ளிகளுடன் இந்தியா முதலிடத்திலும், 113 புள்ளிகளுடன் நியூஸிலாந்து இரண்டாவது இடத்திலும், 109 புள்ளிகளுடன் ஆஸ்திரேலியா 3வது இடத்திலும் உள்ளன.

>>>>><<<<<<

மெக்ஸிகோ சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shriyanshi Valishetty பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 12-21, 21-16, 21-18 என்ற செட்கணக்கில் பிரேஸிலின் Juliana Viana Viera-வை வென்றார்.

>>>>>END<<<<<<